*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **20 ஆகஸ்ட் 2025**

**<u>பத்திரிகை செய்தி</u>**

முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாள் சத்பவனா திவஸ் ஆக இன்று (20.08.2025) அனுசரிக்கப்பட்டது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் ராஜீவ் காந்தி சிலை சதுக்கத்தில் உள்ள அண்ணாரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

புதுச்சேரி அரசு செய்தி மற்றும் விளம்பரத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் திரு ந.ரங்கசாமி, மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு க.லட்சுமிநாராயணன், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு P.ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் ஜெ சரவணன், திரு AKD ஆறுமுகம், திரு KSP. ரமேஷ், திரு தட்சணாமூர்த்தி, செய்தித்துறை செயலர் திரு முகமது ஆசின் அபித் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், அனைவரும் சத் பவனா திவஸ் (நல்லிணக்க நாள் உறுதிமொழி) எடுத்துக் கொண்டனர்.